**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 07-02-2023**

**ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-02-07 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-02-08 | 2023-02-09 | 2023-02-10 | 2023-02-11 | 2023-02-12 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 30.0 | 31.0 | 31.0 | 31.0 | 32.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 21.0 | 21.0 | 22.0 | 22.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 50 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8.0 | 10.0 | 14.0 | 12.0 | 12.0 |
| காற்றின் திசை (கோணம்) | 50 | 20 | 50 | 20 | 20 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 3 | 3 | 3 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் மழை பெய்யும் வாய்ப்பு இல்லை. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். அதிக பட்ச வெப்பநிலை ஆனது 30-32 செல்சியஸ் ஆகவும் குறைந்த பட்ச வெப்பநிலை ஆனது 21-23 செல்சியஸ் ஆக பதிவாகலாம். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில் காற்று வட திசையில் இருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாட்டில் பிப்ரவரி 12 முதல் பிப்ரவரி 18 வரை மழை இயல்பை விட குறைவாகவும் அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| கால்நடைகளில் புறஒட்டுண்ணியின் தாக்கம் அதிகமாக காணப்படுவதால் இதனை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி நீக்க மருந்து சைபர்மெத்திரின் 1%கொண்டு தூய்மைப்படுத்தலாம். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பருத்தி | பருத்தியில் தத்துப்பூச்சிகளின் தாக்குதலால் இலைகளிலுள்ள சாறுகள் உறிஞ்சப்பட்டு இலைகளானது சுருண்டுவிடுகின்றன. மேலும் இலைகளின் ஓரங்கள் காய்ந்து தீய்ந்தது போல காணப்படும். பூச்சியின் தாக்குதல் அதிகமாகும் பொழுது இலைகள் காய்ந்து பின்னர் உதிர்த்து விடும். செடிகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மேலும் பூ மற்றும் காய் பிடிப்பது குறைகின்றது. இதனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு பின்வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம். பிப்ரோனில் 5% SC @ 600 ml/ac அல்லது இமிடாகுளோபிரிட் 17.8% SL @ 40 ml/ac அல்லது தயமீதாக்சம் 25% WG @ 40 g/ac |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | மிளகாயில் முரணை சிலந்திகள் இலையின் அடிப்பகுதியில் இருந்து கொண்டு சாற்றினை உறிஞ்சுகின்றன. இலைகளானது கீழ் நோக்கி சுருண்டும், இலைக்காம்புகள் நீண்டும் காணப்படும். இதனை கட் டுபடுத்த ஒரு ஏக்கருக்கு ஸ்பைரோமெசிபென் 22.9 எஸ்சி @ 100 மி.லி அல்லது பென்பைராக்சிமேட் 5 ஈசி @ 200 மி.லி அல்லது பெனசாகுயின் 10 ஈசி 400 மி.லி. மருந்துகளில் ஏதேனும் ஒன்றை சுழற்சி முறையில் தெளிக்க வேண்டும். |
| தென்னை | தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தஞ்சாவூர் வாடல் நோய் வர ஏதுவாக உள்ளது. நோயின் ஆரம்பநிலை அறிகுறிகள் வாடல், ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொங்கி விடுதல் அதைத் தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிறசாறு கசிந்து திசுக்கள் அழுகி, தண்டின் அடிப்பகுதியும் அழுகிவிடும். இதனை கட்டுப்படுத்த 2 மில்லி ஹெக்சகோனசோல் உடன் 100 மில்லி தண்ணீர் கலந்து வேர் மூலம் (3 மாத இடைவெளியில் 3 முறை) செலுத்தலாம். |